மு.முதல் இயக்குநர் அலுவலகம்
சேப்பாக்கம்
-7 JAN 2019
சென்னை-600 005
நில அளவைப் பதிவேடுகள் துறை

வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத் துறை,
நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட அலகு,
நி.அ.2(2) பிரிவு,
தலைமைச் செயலகம், சென்னை–600009.

**கடித (நிலை) எண்.07/நி.அ.2(2)/2019, நாள் 03.01.2019.**

அனுப்புநர்
டாக்டர். அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
இயக்குநர்,
நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டம்,
சேப்பாக்கம், சென்னை–5.

அய்யா,

பொருள்: புலத்தணிக்கை செய்யும் சமயத்தில் கிராம நிருவாக அலுவலர்கள் தெரிவிக்கும் ஆட்சேபனைகளை கருத்தில் கொண்டு உத்திரவு பிறப்பிக்க வட்டாட்சியர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்குதல் மற்றும் நகர்ப்புற நிலஅளவை பதிவேட்டின் நகலை கிராம நிருவாக அலுவலர்களுக்கு வழங்கவும் முழுபுல பட்டா மாறுதல் இனங்களில் கிராம நிருவாக அலுவலர்களின் பரிந்துரை பெற்று ஆணை பிறப்பிக்க அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் கடிதம் ந.க.ச6/43761/ 2018 (நி.அ.), நாள் 17.12.2018.
2. கடித (நிலை) எண்.497, நாள் 26.12.2018.
3. நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் அவர்களின் கடித எண்.K6/43761/2018 (Sy), நாள் 02.01.2019

-----

பார்வையில் காணும் கடிதங்களின் மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகிறது.

2) பார்வை 2–இல் கண்டுள்ள கடிதத்தில் உட்பிரிவு பட்டா மாறுதல் மற்றும் புல எல்லை அளத்தல் ஆகிய இனங்களில் கிராம நிர்வாக அலுவலர்களின் அறிக்கையின்றி ஆணைகள் வெளியிடப்படுவதால் இவை குறித்து பின்னாளில் ஏற்படும் வருவாய் நீதிமன்றம் மற்றும் சிவில் நீதிமன்றத்தில் தொடுக்கப்படும் வழக்குகளில் கிராம நிர்வாக அலுவலர்கள் நீதிமன்றங்களில் முன்னிலையாகி விவரங்களை அளிப்பதில் மிகுந்த சிரமங்கள் ஏற்படுகின்றன எனத் தமிழ்நாடு கிராம நிர்வாக அலுவலர் சங்கம் தெரிவித்திருப்பதால், புல எல்லை அளத்தல் மற்றும் உட்பிரிவுடன் கூடிய பட்டா மாறுதல் நடவடிக்கைகளில் குறுவட்ட அளவர் புலத்தணிக்கை மேற்கொள்ள நிர்ணயிக்கும் தேதி குறித்த தகவலை கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அளிக்கலாம் எனவும் மற்றும் அப்புலத்தணிக்கையில் கிராம நிர்வாக அலுவலர்களும் கலந்து கொள்ளலாம் எனவும்

/த.பி.பா./

தமிழ்நாடு கிராம நிர்வாக அலுவலர் சங்கம் மற்றும் தமிழ்நாடு நிலஅளவை அலுவலர்கள் ஒன்றிப்பு சங்கங்கள் அளித்த கோரிக்கைகளை பரிசீலித்து நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் அரசுக்கு பரிந்துரை செய்ததன் அடிப்படையில் வருவாய்த்துறை சார்ந்த பணிகளில் கிராமங்களை பொறுத்தவரை கிராம நிர்வாக அலுவலர்களே முக்கிய பங்கு வகிப்பதால் புல எல்லை அளத்தல் மற்றும் உட்பிரிவுடன் கூடிய பட்டா மாறுதல் நடவடிக்கைகளில், குறுவட்ட அளவர் புலத்தணிக்கை மேற்கொள்ள நிர்ணயிக்கும் தேதி குறித்த தகவலை கிராம நிர்வாக அலுவலர்களுக்கும் அளிக்க வேண்டும் எனவும் மற்றும் அப்புலத்தணிக்கையில் கிராம நிர்வாக அலுவலர்களும் கலந்து கொள்ளலாம் என்பதை தெளிவுரையாக நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநருக்கு தெரிவிக்கப்பட்டது.

3) பார்வை 3—இல் கண்டுள்ள கடிதத்தில், மாண்புமிகு அமைச்சர் (வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை) அவர்களின் தலைமையிலான 28.12.2018 அன்று நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் புலத்தணிக்கை செய்யும் சமயத்தில் கிராம நிருவாக அலுவலர்கள் தெரிவிக்கும் ஆட்சேபனைகளை கருத்தில் கொண்டு உத்திரவு பிறப்பிக்க வட்டாட்சியர்களுக்கும் மற்றும் நகர்ப்புற நிலஅளவை பதிவேட்டின் நகலை கிராம நிருவாக அலுவலர்களுக்கு வழங்கவும் முழுபுல பட்டா மாறுதல் இனங்களில் கிராம நிருவாக அலுவலர்களின் பரிந்துரை பெற்று ஆணை பிறப்பிக்க அறிவுரைகள் வழங்குமாறு நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

4) நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநரின் கருத்துருவை அரசு பரிசீலனை செய்து அதனை ஏற்று மாண்புமிகு அமைச்சர் (வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை) அவர்களின் தலைமையில் 28.12.2018 அன்று நடைப்பெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில், புலத்தணிக்கை செய்யும் சமயத்தில் கிராம நிருவாக அலுவலர்கள் தெரிவிக்கும் ஆட்சேபனைகளை கருத்தில் கொண்டு உத்திரவு பிறப்பிக்க வட்டாட்சியர்களுக்கு அறிவுரை வழங்கவும் மற்றும் நகர்ப்புற நிலஅளவை பதிவேட்டின் நகலை கிராம நிருவாக அலுவலர்களுக்கு வழங்கவும், முழுபுல பட்டா மாறுதல் இனங்களில் கிராம நிருவாக அலுவலர்களின் பரிந்துரை பெறுவதற்கும் அறிவுரைகள் வழங்க நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

தங்கள் நம்பிக்கையுள்ள,

அரசு முதன்மைச் செயலாளருக்காக.

**நகல்:**
கூடுதல் தலைமைச் செயலாளர்/
வருவாய் நிர்வாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை—5.